ஓலை 37 | ஓசை 139 | மே 2023

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**வாள்போல பகைவரை அஞ்சற்க அஞ்சுக**
**கேள்போல் பகைவர் தொடர்பு.**

வாளைப்போல் வெளிப்படையான பகைவர்க்கு அஞ்ச வேண்டியதில்லை,
ஆனால் உறவினரைப் போல் இருந்து உட்பகை கொண்டவரின்
தொடர்புக்கு அஞ்ச வேண்டும்.

**Translation:**

Dread not the foes that as drawn swords appear;
Friendship of foes, who
seem like kinsmen, fear!.

**Explanation:**

Fear not foes
(who say they would cut) like a sword;
(but) fear the friendship of foes
(who seemingly act) like relations.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல
## இலக்கியப் பேரவை

அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

### நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

### இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

### வடிவமைப்பு

அ.வில்சன்


### அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

# அகரமுதல இலக்கியப் பேரவை

அகரமுதல எழுத்தெல்லாம்
அள்ளிக் கோர்த்து
அழகு வரிகள் படைத்திட
அகமுவந்து ஊக்குவிக்கும்
அகரமுதல இலக்கியப் பேரவை
அழியாப் புகழோடு வாழ்க!

சாதிமத பேதங்கள்
சற்றேனும் நான் கண்டதில்லை
சான்றதற்கு கடல்கடந்து
வரும் நம் கவிதைகளும்
வலம்வரும் இங்கு
அழகிய படங்களுடன்.
வந்தனங்கள் வந்தனங்கள்!

ஈழத்துக் கவிகளும்
பாரதக் கவிகளும்
பாகுபாடின்றி அழகிய
தமிழால் இணையும் பேரவையிது!
இதைவிட வேறேது வேண்டும்
ஐக்கியம் வாழ்ந்திட
வளர்க உங்கள் சேவை!

மெல்லத் தமிழினி வாழும்
வரிகளால் சுகந்தங்கள்
எதுகை மோனைகளாய்
குறுவரி ஹைக்கூக்களாய்
குலம் கோத்திர பேதமை தவிர்த்து
இன்பத் தமிழ் மேவிட
அகரமுதல இலக்கியப் பேரவை
வளர்க வாழ்க!




கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# நறுந்தொகை

பொருண்மை: உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா

பொருளுரை: செல்வமும் வறுமையும் ஓரிடத்திலேயே நில்லாமல் மாறி மாறி இடம் பெயரும்

பா வகை: பதின் சீர் மண்டிலம் (ஓரடியின் பத்துச் சீரும் ஈரசையான இயற்சீர்களில் வரும். அரையடியில் ஆறு மாச் சீரும், அடுத்த அரையடியில் நான்கு மாச் சீருமாக *மா+மா+ மா+மா+மா+மா+மா+ மா+ மா+மா* என்று அடி தோறும் அமைந்து வரும்.)



மாற்றம் ஒன்றே மாறா தென்பார் மாறும் உலகில்
மாறும் உடைமை மாறும் வறுமை
ஆற்றும் செயலே ஆணி வேராய் அமையும் எதற்கும்
அமைதி யாக அனைத்தும் கடப்பாய்
ஈற்றில் அங்கே யாவும் மாறும் இன்பம் துன்பம்
என்றும் நிலைக்கா இறுதி வரையில்
போற்றும் செல்வம் புகழும் மாறும் போக்கு காட்டி
புரளும் உருளும் புதையும் புலரும்

வழியில் வந்து வழியில் போக வலியும் எதற்கு
வளங்கள் பற்றி வாழ்வில் உனக்கு
அழியா வறுமை அகலும் ஓர்நாள் ஐயம் வேண்டாம்
ஆற்று கடமை அதுவாய் மாறும்
செழிக்கும் செல்வம் சீராய் எங்கும் சிரத்தை கொண்டே
சிறப்பாய் தங்கி சேரா திடமே
சுழலும் புவியில் சுற்றும் யாவும் சுடரும் இருளும்
சூழல் கேற்ப சூடும் வாழ்வே

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# உயிர் கொல்லும் டெங்கு

கோடைகால வெயிலில்
மணிமணியாக முட்டையிடும்
மாரிகால நீருக்குள்
துணிவுடன் உயிர்த்தெழும்

நேரகாலம் பாராமல்
ஊசியாகக் குத்திடும்
காய்ச்சலும் வாந்தியும்
உளைச்சலைத் தந்திடும்



சிவப்புநிறப் புள்ளிகள்
உடம்பில் பளிச்சிடும்
ஓய்வும் பானங்களும்
ஒத்தடம் கொடுத்திடும்

மருந்தும் மாத்திரைகளும்
குணமாக்கப் போராடும்
சுற்றியுள்ளோரைப் பாதுகாக்க
அறிவுரைகள் தரப்படும்

மரணித்தின் வாசலை
முத்தமிடுவோர் பலர்
சாவின் வாயினுள்
சிக்குண்டோரும் உளர்

சுற்றுப்புறச் சூழலை
சுத்தம் செய்வோம்
டெங்கின் பரவலைத்
தடுத்து நிற்போம்

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,இலங்கை

# இதுபோல் ஒரு வாழ்க்கை



அழுகின்ற சிலரை
ஆறுதல் படுத்துங்கள்
நல்லோர் சிலரை
நட்பாகிக் கொள்ளுங்கள்.

தெரிந்த சிலரிடம்
கற்றுக்கொள்ளுங்கள்
தெரியாதோர் சிலருக்கு
கற்பித்துக் கொடுங்கள்.

சில்லறை மனிதர்கள்
சிலரை மன்னித்துவிடுங்கள்
சீண்டிடும் மனிதர்கள்
சிலரைப் பார்த்து சிரித்திடுங்கள்.

உதவிடும் மனிதரை
எண்ணெத்தில் வையுங்கள்
உதறிடும் மனிதரை
உள்ளத்தில் புதையுங்கள்.

ஆசான் சான்றோரை
அடிக்கடி சந்தியுங்கள்
அம்மாவையும் அப்பாவையும்
அவ்வப்போதேனும் சிந்தியுங்கள்.

மனதால் இறைவனை
ஆரத் தழுவுங்கள்
மற்றவை யாவையும்
மறந்திட எண்ணுங்கள்.

இதுபோல் ஒரு வாழ்க்கை
வாழ்ந்திட முயலுங்கள்
இல்லை இன்றே போதுமென
இவ்வாழ்வை முடியுங்கள்.

கவிஞர் ராஜா,சேத்தியாத்தோப்பு

# சின்னஞ்சிறு வயதினிலே!

சின்னஞ்சிறு வயதினிலே
கன்னல் பேச்சோடு
தென்றலாய் வருடி
இன்பம் பொங்க வாழ்ந்தோம்.

நெஞ்சினில் அன்றைய நினைவோடு
வஞ்சமது ஏதுமின்றி
கிஞ்சித்தும் கவலையின்றி
கொஞ்சி விளையாடினோம், நட்புடன்.



பகலென்றும்
இரவென்றும் பாராமல்
பசி தாகம் ஏதுமின்றி
நெடுநேர விளையாட்டு.

ஆசையேதும் கொள்ளாமல்
அச்சமது ஏதுமின்றி
இளங்கன்றாய்ச்
சுற்றித் திரிந்தோம் உற்றாரோடு.

பெற்றோரின்
சொல் கேட்டு
சுற்றத்தைத் தாம் மதித்து
கற்றதை நினைவிலிருத்தி
ஏற்றமுடன் வாழ்ந்தோம்.

இன்றதுவே
நினைவலையாய்
மனதினில் ஓட்டம்.
பரபரப்பு வாழ்க்கையில்
பாசமது ஏதுமின்றி
முகமூடியணிந்து
பொய்யாய் நடித்து
பணத்தின் பின் வேகமாய் ஓட்டம்.

கவிஞர் செ.கலைவாணி,மெல்பேர்ன்

# பாரியன்பன் நாகராஜன் – கவிதைகள்



என் மடியில்
அவள் தலைவைத்து
படுத்திருக்கிறாள்
என்ன மாயம்
என் இதயத்திற்கு
றெக்கைகள் முளைத்திருக்கிறது.

/

வேட்டையாடும்
லாவகத்திற்கு ஏதுவாய்
பசுத்தோலை போர்த்திய புலி
இன்னமும் உறுமலை
நிறுத்தப் பழகவில்லை.

/

எப்போதெல்லாம்
வாழ்க்கையில்
தோல்வியெனும்
இருள் சூழ்கிறதோ
அப்போதெல்லாம்
தன்னம்பிக்கையெனும்
தீபம்
ஏற்றப்பட வேண்டும்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# நந்தவன நாட்கள்

மணமாகிய பின் முதல் முதலாய்
நாள் தள்ளி நாணமுற்ற அந்த நாட்கள்

கர்ப்பமாக இருக்கிறாய் என மருத்துவர் கூற
ஆனந்தத்தில் திளைத்த நாட்கள்

முதல் மூன்று மாதம் வரையிலும்
மசக்கையும் வாந்தியுமாய் கழிந்த நாட்கள்

நான்கு ஐந்தாம் மாதத்தில் அசௌகரியங்களுடனும்
அடிவயிறு மேலிட தொட்டுத் தடவிய நாட்கள்

ஏழாம் மாதத்தில் சீமந்தம் வைத்து வளையல்களுடனே
மகிழ்ச்சியும் சேர்ந்து சுழன்ற நாட்கள்



எட்டு ஒன்பது மாதங்களிலே
என் சிசு புது உலகைக் காண வருகிறதே என்று
பல கோணங்களில் சிந்தித்த நாட்கள்

பத்தாம் மாதத்திலே தன் சிசுவை
அத்துனைத் துன்பத்திலும் இன்பமாய் பெற்றெடுத்த நாள்

பிறந்தவுடன் மழலையை உச்சி முகர்ந்து
பரிவுடனும் பாசத்துடனும் கொண்டாடிய நாள்

என்றும் இனிமையான நந்தவன நாட்களே!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# நிலவோடு நான்!

இருள் சூழ்ந்த இரா பொழுதில்
என் இதயத்தோடு கதை பேசியது
அந்த கொள்ளை நிலா

பரந்த முற்றத்தில் நான் வீற்றிருக்க
கண் முன்னே வந்ததுவே
அந்த வெள்ளை நிலா

செந்தாமரை இலையை ஒத்த
நிறத்தில் மட்டும் மாற்றத்தைக் கொண்டு
மறுபிறவி எடுத்ததுவே வட்ட நிலா



கருமை படிந்த இளம் வானத்திலே
ஆங்காங்கே சிதறுண்ட
விண்மீன்களுக்கு இடையிலே
பளீச்சிட்டது அவ் எழில் நிலா

பாட்டி சொன்ன கதைகளும்
கேட்டு சிரித்த நிமிடங்களும்
கண்முன்னே நிழலாடியது
நிலவைக் காட்டி அம்மா
உணவு ஊட்டிய இரா பொழுதுகளும்

சின்ன சின்ன வண்டுகளின்
மெல்லிய இரைச்சலோடு
குளிர் காற்று உடலை வருடிச் செல்ல
நிலவை காவல் இட்டு
இதமாய் கண்ணயர்ந்தேன்
அவ்வினிய இரா பொழுதினிலே

கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம்(இலங்கை)

# அரசியல் கிளர்ச்சி

நாடு பல ஏடு அரசியல் சுவடு
நடுத்தெருவு மக்கள் மரபு
எத்தனை எத்தனை கிளர்ச்சி
அரசியலின் புரட்சி

புண்பட்டதே விண்ணும் மண்ணும்
வலி அலங்காரத்தில்
தினம் தினம் அரசியலின் ஆதங்கத்தில்

அலைமோதுதே மக்கள் கூட்டம்
வழி தெரியாமல் மழுங்கிப் போய்
துயரக் கண்ணீர் வட்டத்தில்
ஓரமாக நாட்டில்

ஆளுக்கு ஒரு கட்சி
ஆளுக்கொரு நீட்சி
ஆளுக்கு ஒரு படை
ஆளுக்கு ஒரு நடை

ஆளுக்கு ஒரு கீதம்
ஆளுக்கு ஓர் விதம்
ஆளுக்கு ஒரு கொடி
ஆடுதே ஊர் நொடி

சலவை பெட்டிகள் அரசியல்வாதி
அதில்
சாமானிய மக்கள் இறப்பதே மீதி

அவன் குடும்பம் கொடியேறும்
மக்கள் குடும்பம் குடி இறங்கும்
நாட்டில் நாயகன் அரசியல்வாதி
நாட்டை அழிப்பதில் அவனே நீதி

பாதுகாப்பு பலவிதம் மக்களின் வரிப்பணம் தினம் தினம்
நாயும் அரசியல்வாதியும் ஒன்று
நக்கி பிழைப்பது இவர்களின் தொண்டு

ஏறு பிடிப்பவனுக்கு ஏடுகள் இல்லை
நாடு பிடிப்பவனுக்கு நடிப்பதே தில்லை
படித்தவனுக்கு வாழ்வதே நாட்டில் தொல்லை
ஆனால்,
அரசியல் படித்தவனுக்கு கொள்ளை அடிப்பதே வெள்ளை

எத்தனை எத்தனை மெய்ப்பாடு அரசியலின் போய் புறப்பாடு
தொண்டர்கள் தொங்கு பாலம் அரசியல்வாதிகள் ஏறும் காலம்

(கட்டிங்கில்) கட்சி வளர்ப்பான்
(செட்டிங்கில்) சட்டி உடைப்பான்
முதலில் காலை பிடிப்பான்
பிறகு கழுத்தை மிதிப்பான்




அவன் வாழ அரசியல்
மக்கள் வாழ புரட்சியியல்
நாட்டில்
சாதி ஒழிக்க ஒரு கட்சி
பிறகு ஏன் சாதிக்கே கட்சி

இதுவே அரசியலின்
அரசியல்வாதி கிளர்ச்சி
முட்டாள் மனிதா! சிந்தித்துப் பார்

கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# ஞாபகங்கள் வலிக்கிறது

இந்த உலகில் வந்த நாள் முதல்
ஞாபகங்களை நினைத்துப் பார்த்தலே
மனம் வலிக்கிறது
மழலைக் கால ஞாபகங்கள்
விரல் பிடித்து கற்க பழகிய ஞாபகங்கள்
தொடக்க பள்ளி ஞாபகங்கள்
மேல் நிலைப் பள்ளி ஞாபகங்கள்
பள்ளிக் கால புகைப்படம் எடுத்த ஞாபகங்கள்
தேர்வு எழுதியதை பத்திரிகையில் பார்த்த ஞாபகங்கள்
முதல் மதிப்பெண் பெற்று பள்ளி வளாகத்தில்
கரும்பலகையில் எழுதி போட்ட ஞாபகங்கள்
கறுப்பு வெள்ளை தொலைக்காட்சியில்
படம் பார்த்த ஞாபகங்கள்
முதல் மழையில் நனைந்த ஞாபகங்கள்
உணவு இடைவேளையில்
குச்சி மிட்டாய் பள்ளி அருகே பாட்டியிடம்
நெல்லிக்காய் மாங்காய் வாங்கி ஞாபகங்கள்
ஆசிரியரிடம் அடி வாங்கிய ஞாபகங்கள்
முதல் காதல் ஞாபகங்கள்
கல்லூரி வாழ்வில் ஊர் சுற்றிய ஞாபகங்கள்
வேலைக்கு சென்ற ஞாபகங்கள்
சினிமா பார்த்த ஞாபகங்கள்
திருமணத்தில் பெண் பார்த்த ஞாபகங்கள்
திருமணமாகி முதல் குழந்தை பெற்று எடுத்த ஞாபகங்கள்
நான் தகப்பனாய் இருந்து குழந்தைக்கு செய்த ஞாபகங்கள்
ஞாபகங்கள் ஒவ்வொன்றும் நினைவுக்கு வர
அனைத்தையும் ஒரு கணம் நினைத்துப் பார்த்தாலே
நெஞ்சு வலிக்கிறது



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# உழைப்பே உயர்வு

உன் நெற்றி வியர்வையில்
நம் வயிறுகள் பசியாறும்

நீ சேற்றில் காலூன்ற
நாம் சோற்றில் வைக்கிறோம்

நீ கழனி வளர்க்க
நம் குழந்தைகள் வளரும்

உழைப்பாளர் இருக்கும் வரை
உலகம் வாழும்

சொந்தக் கால்களில்
வாழ்வோரே உயர்குலத்தோர்

அடுத்தவர் உழைப்பில்
வாழ்வோர் இழிகுலமேயாம்

இருகுரவர் உழைப்பில் வாழ்வோர்
தற்புகழ்ச்சி தவிர்த்திடுவீர்

உன்கரங்கள் உழைக்கும் நாள்
உனக்கும் உய்வுண்டு

குடிப்பது கூழேயானாலும்
உழைத்துப் புசித்திடல் மேன்மை

உழைப்பின் மகிமை
உணர்ந்தே உயர்ந்திடு மகனே



கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# கல்லாமை

## அதிகாரம் : 41




அறிவிற்கான நூல்கல்லாமல்
அவைநடுவே ஒருவன்பேசுதல்.
அரங்கமிழைக்காமல் வட்டுக்காயெடுத்து
உருட்டியாடல் போன்றதாம்.

கற்றோரின் அவைநடுவே
கல்லாதவன் பேசுதலென்பது.
மார்பில்லாதவள் ஒருத்தி
பெண்மையை விரும்பினாற்போன்றதே.

கற்றோர் முன்னிலையில்
ஒன்றும் பேசாது.
அமைதிகாத்தலால் கல்லாதவரும்
மிகவும் நல்லவரே.

கல்லாதான் அறிவுடைமை
நன்றாக இருந்தாலும்.
கற்றறிவுடையோர் அதனை
நன்றென்று கொள்ளார்.

கல்லாதானொருவன் தன்னைத்தான்
உயர்த்தும் மதிப்பானது.
கற்றோரிடம் பேசுங்கால்
உள்ளதும் கெட்டொழியும்.

கல்லாதோர் உடம்பில்
உயிரைத் தாங்குதலென்பது.
எந்தபலனுமில்லாது கிடக்கும்
களர்நிலத்தைப் போன்றதே.

நுட்பமாய் நுழைந்து
கல்லாதோனின் உடலழகு.
மண்ணால் வடிவமைத்த
அழகுப்பெண்ணின் உடலழகுக்கொப்பானதே.

நற்கல்வியுடைய நல்லோரிடம்
நிலவும் வறுமையைவிட.
கல்லாதவனின் பெருஞ்செல்வம்
பெருந்துன்பம் தருவதாகும்.

கல்லாதோர் மேல்குடியினராயினும்
அவர் தாழ்குடியில்பிறந்த.
நற்கல்வி கற்றோர்போன்ற
பெருமை இல்லாதவராம்.

அறிவுப்பெருக்கத்தின் காரணியாம்
நூல்களை கல்லாதவரை.
கற்றோர்முன் ஒப்பிடுகையில்
தாழ்ந்த விலங்குகளுக்கொப்பராம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# வைட்டமின் அழகி

இந்நொடி வரை எத்தனைமுறை
நேரிலும் புகைப்படத்திலும்
கண்டிருப்பேனோ
எண்ணிக்கையில்லை
பனிப்பிரதேசப் பழரசப்
பதுமையின் சந்திப்பை
இப்போது வரவில் வைக்கிறேன்



முந்தைய பொழுதொன்றில்
சலனங்களெதுவுமின்றி
மௌனத்தில் ஆழ்ந்த உன்பெண்மை
களத்தில் பெரும்
போரொன்றை நிகழ்த்தி
என்னை வீழ்த்திட நினைப்பதேனோ

நுரைபொங்கி கொப்பளிக்கும்
மது ரச சுவையில்
காணத் திகட்டாத
உன்னழகின் போதையில்
தடமெங்கும்
தள்ளாடி விழுந்தேன்

உலக மொழிகளெல்லாம்
உன்னை வர்ணித்தெழுதிட
தவமிருந்து இடம்தேடி ஏங்கிட

சிமிட்டாமல் சிறைபிடிக்கும்
விழிகளுக்குள் விழுந்து
சிறுபறவையாய் வழிதேடி
அலைகிறேன்

உன்னுதடுகள் பூத்திடும்
புன்னகை பூரிப்பில்
என்னிதயமும் எடைகூடி வீங்கி
உன் நினைவினில் துடித்திட
இயலாமல் தவித்திட

வைட்டமின் அழகி
உன்னசைவில் வெளிபடும்
உணர்வுகளால் வைட்டமின்
குறைபாடுகளும் நீங்கி
இதயமும் மெலிந்து பிழைக்கிறேன்

கவிஞர் கோவை ஆனந்தன்,குமாரபாளையம்,கிணத்துக்கடவு

# இளந்தமிழே! தாய்த்தமிழே!!

இளந்தமிழே,
தாய்த்தமிழே,
இன்பச்சுனையே
இன்னருமமழையே!

உலகஉருவே
உவந்தசுவையே,
உண்டகனியே;
உயர்ந்த மலையே!

அழகுமலரே
அருமைமானே
அறிவியல்கலையே
அணைப்புகதப்பே!

உறவின்மகிழ்வே
உன்னதஉயிர்ப்பே,
உதயக்கதிரே
உலகக்குடையே!

ஓர்மைபருவமே
ஓங்கயசிகரமே.
ஆருயிர்உறவே;
ஆரணங்குவெட்கமே

முத்துக்குவியலே,
மூதுரைமுனியே,
முதன்மைக்கனவே;
மூவேந்தர்கொடையே!

தேனிலவே,
தேனிசைசபையே!
தாங்கியமேகமே;
தரணியின்மகத்துவமே!

சந்தத்தடாகமே,
சந்ததியர்பலியே,
சந்தனக்குழம்பே
சிந்தனைச்சிலையே!

அறிஞர்மகிழ்வே
ஆசைத்தருவே
ஆடியஅணங்கே
ஆறாஅருவியே!

கற்றவர்மொழியே,
கணினிமகத்துவமே,
ஆட்சிஅலையே;
ஆதாரத்தமிழே!

**கவிஞர் இரஜகை நிலவன், மும்பை**

# ஹைக்கூ

ஆற்று முழுவதும்
மிதந்து செல்கின்றன
கரையேறாத மேகங்கள்.

*

அழகாய் தெரிகிறது
பரந்த அளவில் வயல்கள்
அடிவானத்துடன் மலைகள்.



கவிஞர் அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# மௌனமே சிறப்பு



மடத்தனமான பேச்சை விட
மாற்றுவார்த்தை தேடியே,
மிதமிஞ்சிய செயலுக்கும்,
மீதமுள்ள காலத்தில்,
முற்றிலுமாகவே,
மூட்டைகட்டிடவே,
மெல்லவிலகுவதும்,
மேதகு செயலுக்கும்,
மையமான காரணத்தை,
மொத்தமாக சண்டையிட்டு,
மோதாமல் வேறு வழியிலே,
மௌனம் சாதித்து,
மறுவார்த்தை பேசாமலிருப்பதே,
மத்திமமான தீர்வானதே!?

காதல் போர்;
மறுவார்த்தை பேசிடவே,
மன்னனவனும்,
மருவி நின்றானே,
மனதுக்கினியவளிடம்
மனம்விட்டு பேசிடவே!

பிறப்பும் இறப்பும்;
ஜனனித்த சிசுவையும்,
மரணம்ஜனித்தவனையும்,
மறுவார்த்தை பேசி,
ஜெயித்திடவே யாருள்ளார்?

பெண்ணின் முடிவு;

மறுவார்த்தை பேசாத
பேதையவளும்,
பேச்சு மூச்சற்று நின்றாளே,
நின்றவளும்
நிலைகுலைந்து சென்றாளே,
சென்றவளை தடுத்து நிறுத்த
யாருமில்லை? என்றுணர்ந்தவளும்,
இறைவனடி சேர்ந்தாளே!

நல்லவர்கள்;
மாற்றுவார்த்தையறிதவர்களும்,
மறுவார்த்தை பேசவே,
மறந்துபோயிடுவார்கள்.

கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# பொறுப்பற்ற குமுகம்

சுற்றும் உலகை சுணங்க செய்து
சூழ் நிலையை மாற்றி - புதுமை
பெயரில் நெகிழியை திணித்து
பழனத்தை பாழ்படுத்திய குமுகம்!

தெருவில் வீசப்படும் கழிவு
தென்றலை நோக செய்தது!
நீர் தடங்கள் வேர் அறுந்து
கையுறு நிலையில் நிற்கிறது
தெள்ளிய கதிரும் இயல்பு
திரிந்து தழலை உமிழ்கிறது
கடல் முகில்கள் நிற மாறி
சோர்வு சுருளாக நிற்கிறது
ஐம்பெரும் பூதங்களை சிதைத்த
குமுகம் சூழிலியல் விழிப்புணர்வு
கருத்தரங்கில் நெகிழி குப்பியில்
நிரப்பட்ட நீரை தான் அருந்துகிறது



கவிஞர் செ.தமிழ்நேயன்,சென்னை

# உலகை உயர்த்தும் உழைப்பு

அரியாசனத்தில் அரசனாய் அமரச் செய்ய
அலையோடு போராடும் உழைப்பாளி வர்க்கம்
அடை மழையிலும் அடங்காது உழைப்பு
அல்லி வீசும் வாசனை உழைப்பு

வியர்வை ஆறாய் ஓடுவதையும் மறந்து
விரக்தியின்றி விலை மதிப்பற்றதை பெற
விடியல் வந்து இருலை அகற்ற
விமர்சனங்களும் விக்கித்து போய் பார்த்திட



புதிய விடயங்களை தேடி உழைத்து
புரியாத விடயங்களை அறிந்திட உழைத்து
புதுமை கண்டிட உயர்த்திடும் உழைப்பு
புதிய மனினாய் மாற்றிடும் உழைப்பு

வயது எல்லை இல்லை உழைப்புக்கு
வயதாகினாலும் மதித்திட வைக்கும் உழைப்பு
வறுமையிலும் வருத்திடாமல் வைக்கும் உழைப்பு
வளம் வரும் பொக்கிஷம் உழைப்பு

உயர்வை தந்திடும் தந்திரம் உழைப்பு
உலகை ஆளவைக்கும் மந்திரம் உழைப்பு
உவகை கொண்டிட வைக்கும் உழைப்பு
உயிருக்கும் மதிப்பு உழைப்பால் வந்தது

கவிஞர் ஜஸீரா ஜலீல்

# ஊடலின் மீது சிறு பாலாடை



அந்த ஒரு சிறு
விரல் தீண்டலில்
முறிந்த மூங்கிலில்
இராவணனின் காதலும்
ரவிவர்மன் காவியமும்
பின்னி பிணைந்தாடுகிறது.

ஊடுபனியில்
கூடியாடும் இந்த
இடைவெளியில் பிடித்துறங்கிடுகிறது
ஊடல் பணி
உடைமாற்றி
உடைமாற்றி
எனையேமாற்றி
நுழைகிறது
எனது புல்லாங்குழலில்.

எத்தனை இசைமுறைகள்
கடந்தேயாயினும்
மெல்ல சூடேற்றி
புள்ளிகளை மென்மை செய்து
அகலமுற
அகலமுற
அகழ்வில் ஈடுபடுகிறது
எழு துளைகளைத் தாண்டியும்
முகாரி ராகமொன்று.

தெளிந்தும்
தெளியாமல்
பசித்த பொழுதெல்லாம்
போர்த்தி பரவுகிறது
ஒருவரைக்கொருவர்
விடைபெறும்
சிறு நொடிகளின்
மேற்படரும்
ஊடலின் மீதேறும் பாலாடை போன்று.

**கவிஞர் சே கார்கவி கார்த்திக்**

# நல்லூர் கந்தன்!

கலி விருத்தம்
(தேமா கருவிளம் கூவிளம் தேமா)

நல்லூர் இடந்தனை நாடியே பவ்வம்
எல்லை கடந்தொளிர் எம்பெரு மானைக்
கல்வேல் வடிவினில் கண்தொழும் போழ்து
குல்லை மனக்குறை குன்றுகள் தேயும்

பவ்வம் - கடல் ; குல்லை - துளசிமலர்;



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# மக்கட்பேறு

## அதிகாரம் - 07




நல்மக்களைப் பெறுதல்

நன் மக்களைப் பெற்றவன் புண்ணியவான்.

அதிலும் அறிவு சிறந்த குழந்தைகளைப் பெற்றவர்
பிறவித் துன்பத்தை கடப்பவராவார்.

நாம் நல்லோர் என்றாலும்
அவர்களின் கர்மா அவர்களைத் தொடரும்.

குழந்தைகள் உண்ட மிச்சமான எச்சில் கூட அமிர்தமே.

எவ்விசையிலும் இல்லை குழந்தைகளின் மழலைச் சொல்லின் இசை.

தன் குழந்தைகளுக்கு நல் வழிகாட்டி தந்தையே.
இவரின் கடமையும் இதுவே

தன் மக்களை அறிவிற்சிறந்தோன் பண்புடையோன். என
ஊர் மெச்ச கேட்கும் தாயின் செவிகள் மட்டுமல்ல
உள்ளமும் உற்சாகத்தில் உருகிப் போகுமே
மகிழ்ச்சியிலும் உவகையிலும் உள்ளம் பெருமைக்கொள்ளுமே

பிள்ளைகளும் பெற்றோர்களுக்கு பெருமை சேர்க்க வேண்டும்

பெற்றோரின் பெயரைக் காப்பது பிள்ளைகளின் கடமை

நல்ல பிள்ளைகளாக நாளும் வளருங்கள்

நாமும் நன் மக்களைப் பெற்று நல்ல சந்ததிகளை உருவாக்குவோம்.

நன்மக்கள் என்பது பிள்ளைகளைப் பெற்று போடுவதில் இல்லை

நமது வளர்ப்பில் உள்ளது

கவிஞர் சுமதி தசரதன், சென்னை

# தாய் போல

நிழலுக்கு ஒதுங்கி விட்டு
இடம் பெயர்கையில்
சில பொன்னிறப் பூக்களை
தலையில் தூவி அனுப்புகிறது
சரக்கொன்றை மரம்
பசித்தக் குழந்தைக்கு
ஊட்டிவிடும் உணவோடு
சில முத்தங்களைப் பதித்து
தலை வருடும்
தாய் போல.



கவிஞர் ஐ.தர்மசிங்,நாகர்கோவில்

# உரசல்கள்



தங்கத்தை உரசாமல் தரம் தெரியுமா?
தகரத்தை உரசாமல் துரு விலகுமா?
கற்களை உரசாமல் பொறி பறக்குமா?
மேகங்கள் உரசாமல் மின்னலா?

தேகங்கள் உரசாமல் மோகம் அடங்குமா?
வேதங்கள் உரசாமல் ஞானம் பிறக்குமா?
வீரர்கள் பொருதாமல் வீரம் சிறக்குமா?
தென்றல் தீண்டாமல் தேகம் சிலிர்க்குமா?

சொற்கள் உரசாமல் விவாதம் விளையுமா?
சாலையில் உரசாமல் பயணமாகுமா?
அதிகாரத்தோடு உரசாமல் புரட்சியாகுமா?
ஆணடவனோடு உரசாமல் தமிழ் சிறக்குமா?

உரசல்கள் ஒரு வகையில் சரசங்களே
நெருங்காமல் உரசல் ஏது?
பிரிந்து கிடந்தால் புணர்ச்சி ஏது?
விழுங்காமல் நுகர்ச்சி ஏது?

கண்ணகி பாண்டியனோடு உரசியதால் சிலப்பதிகாரம்
பாஞ்சாலி உரசியதால் பாரதம்
இரவணனோடு உரசியதே இராமகாதை
எல்லா உரசல்களும் தர்மத்தின் பிறப்பு

முரண்படு பின்பு முடிவெடு
ஊடலின்றி கூடல் இனிக்காது
பொறியின்றி அனல் தகிக்காது
உரசலின்றி பூமிக்கு மழை இருக்காது

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு,திருச்சி

# அழகே

துஞ்சும் இதழ்கள் மோகமாகும்.
கெஞ்சும் விழிகள் வேதமாகும்.
பஞ்சுமஞ்சும் கலந்த தேகமாகும்
கொஞ்சும் கூந்தல் கீதமாகும்.
விஞ்சும் மெய்யழகால் தாகமாறும்
சஞ்சலப்படுத்திக் கொல்லாதே போதும்.



கவிஞர் மதீரா (அறிவிப்பாளினி),இலங்கை

# கைதட்டல்

அங்கீகரிக்கும்
கைத்தட்டல்கள்
அறிவதில்லை
வெற்றியின்
பின் இருக்கும்
கண்ணீர்த் துளிகளை.



கவிஞர் கீர்த்தனா பு,பாரதியார் பல்கலைக்கழகம்,பெருந்துறை

# தன்முனைக் கவிதை

## 01. மொழி

மொழிகள் என்பது
முத்தங்கள் போன்றது
சத்தமே இல்லாமல் வந்து
சமரசம் செய்திடும்.

## 02 . உறவு

உறவுகளின் உறைவிடமே
மனமென்ற கோவிலாகும்
கூடலும் ஊடலும் குறைவில்லாமல்
வந்து சேரும்

## 03 . வாழ்க்கை

வானமே வசப்படும்
வானவில்லாய் மறைந்துவிடும்
அல்லும் பகலும் மாறிவிடும்
அயராது உழைத்திடும்

## 04 . இயற்கை

அடர்வனமும் காற்றிடம்
ஆனந்தத்தை கேட்டிடும்
எழில் ஒத்த அழகினையும்
பசுமையாய் தந்திடும்

## 05 . இறைவன்

மதங்களில் அடைத்து
மாதங்களை கழித்தோமே
அன்பே ஓர் இடமாய்
அனுதினம் மறந்தோமே



## 06 . அம்மா

அம்மாவின் பாசம்
அமாவாசை போன்றது
அளவில்லா குறைவதும் நிறைவதும்
எவருக்கும் தெரியாது

## 07 . மழை

விறுவிறுன்னு வந்து
மேகத்தில் நுழைந்து
இமைப்பொழுதில் கோலத்தை கலைக்க
கார்முகிலாய் பொழிந்தாயே

## 08 . ஏமாற்றம்

உயர்வாய் நினைத்து
உயிரையும் கொடுத்தேன்
தேவைகளை எடுத்து தேதியும்
கொடுத்தாய் நீயாரென்று

## 09 . களவு

கனவில் வந்து
களவு கொண்டாயே
கனிந்த காலத்தில் அழியாமல்
நீயும் நானும்.

## 10 . காகிதம்

காற்றடித்த வேகத்தில்
திசைமாறி பறந்தோம்
ஓரிடத்தில் நில்லாமல் நின்று
ஓய்ந்து போனோமே.

கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# கருப்பும் அவளும்

அவளுக்கே உரித்தான அழகு!
கரு "மை"யும் அவள் "மை"யும்
வெள்ளை முட்டையில் கருமிளகு விழுந்ததுப் போல.
அவள் கண்கள்..
அவள் கண்கள் அசைவினில் காகமும் கரைய மறுக்கிறது.
கால் கொலுசு சத்தம் கேட்டதும்
உந்தன் வருகையை கண் அசைவினை கூட திரும்பிடாமலே
கணக்கு வைத்திருந்தேன்
பூ வானமாய் பூத்தவளே.
பூ மழையாய் பொழிகின்றாள்
புன்னகையாலே.
நெற்றி சந்தனம்
நேராய் சிறு குங்குமம்
விரிந்த கூந்தல்
விரியாத காதோர சுருண்ட கூந்தல்
சிறு சிறு புன்னகையில்
சிதறாத சிரிப்பு முத்துக்கள்
அன்பான பேச்சு
ஆரவாரமில்லா அன்பு.
ஆம்.. அவளுக்கே உரித்தான அழகு.



கவிஞர் கு.ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி,மதுரை

# மந்திர சொல்

அம்மா என்ற சொல்லும்.
அகிலம் ஆளுதே!
அகம் அதையும்
அசைத்தும் பார்க்குதே!
அரவணைக்கும் கைகள்
அவளின் ஆயுதம் !
அழகாய் மாறும் புது காவியம்!
அன்பை சொல்லும்
அவளின் ராகம்!
ஆராதனை ஆகுதே
அழகாய் மாறுதே !
அதிசயமான ஓர் மந்திரம்
அதுவே என்றும் தந்திரம்!
அழகான சேய்கள் மொழியில்
அற்புதமாய் மலர்வாய் அவளும்!
ஆயிரம் ஆயிரம் பெயர்கள் இருந்தும்!
ஆண்டவனும் அடிபணியும்
அமிர்தமாய் மாறும் சொல் "அம்மா "



கவிஞர் சாரா ஜகன்,சென்னை

# தெரிந்து தெளிதல்

யானைக்குத் தும்பிக்கை எப்படியோ அப்படியே
யாவருக்கும் புவியில் நம்பிக்கை உதவிடும்!
தன்னை நம்பாதான் தரணியில்யாரை நம்பினாலும்
இன்னல் அவனை விட்டு விலகிடுமோ?
தன்மீது ஒருவன் கொள்ளும் நம்பிக்கையே
தன்னம்பிக்கை என்று தரணியில் நாம்சொன்னாலும்
தரம்வாய்ந்தோரை நம்புவதில் தவறொன்றும் இல்லை!

வான்புகழ் கொண்ட வள்ளுவன் தெரிந்துதெளிதல்
வேண்டுமென நமக்குரைக்க "தெரிந்து தெளிதல்"
என்றொரு அதிகாரமே தந்தனர் என்றாலும்
எம்மருமை மனிதர்கள் நடிப்பில் கெட்டிக்காரர்கள்;
அவர்தம் நடிப்பாற்றலால் அவர்யாரென தெரிந்துதெளிந்திடல்
அரியதாய் அமைந்திருப்பதை அனைவரும் அறிவோம்தானே!

இரணியன் என்றொரு கொடூர அரசன்
இந்திரிய பலங்கொண்டு இந்திரன்முதலா னோரையடக்கி
தானே படைப்போன் காப்போன் அழிப்போனெனத்
தானாய்த்தன்னை அறிவித்து மக்களைத் திகைத்திடச்செய்தான்!

தெரிந்துதெளிதல் பெற்றோரும் உயிரபாயத்தால் இரணியன்
கடவுளில்லையென தெளிவாய் தெரிந்ததும் கடவுளென
கதறியே வாழ்ந்திட இரணியின் ஈன்றவன்,
பிரகலாதன் என்ற பெயர்கொண்ட பெரியோன்
பிதாவானாலென் மன்னனாலென் யானுரைக்கேனிவன் நாமத்தையென
தெரிந்துதெளிந்து கூறியதோடு "நாராயணா" எனும்நாமத்தை
தெளிவாய் உச்சரித்து உச்சசண்டையில் உரைத்தானவன்,
"தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்" என!



தெரிந்துதெளிந்து உரைத்தவன் சொல்லை உண்மையாக்க
தெறித்த தூணிலிருந்து வந்தலெட்சுமி நரசிம்மரே
தமியேனும்மை உமதிந்த சுபகிருது சித்திரை
ஜெயந்திநாளில் சரணடைந்து போற்றி பணிகின்றேன்;
ஜெயமெனுக்கெந் நாளும்நீவிர் மனமுவந்து அருள்கவே!

குறள் 501: தெரிந்து தெளிதல் அதிகாரம்.
அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்.

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# நெஞ்சத்தில் தஞ்சம் புகுந்த கவிதை



கற்பனைத் தேன் சுரந்திடும் ஊற்றாக
கற்பான தேவதை வாசனைக் காற்றாக

கற்றவை தேடலில் விளைந்திட்ட கீற்றாக
கற்பாறை தனிலே துளிர்த்திட்ட நாற்றாக

இன்பத் தமிழ்க் கனியின் சாறாக
இதயத்தில் பொங்கிடும் பனி ஆறாக

இன்னல்கள் மறந்து மனமாகும் சீராக
இதமாய் உள்ளத்தை நனைத்திடும் நீராக

நெஞ்சத்தில் தஞ்சம் புகுந்த கவிதை
மஞ்சத்தின் தாலாட்டில் நான் குழந்தை

கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான்குடி(இலங்கை)

# புத்தகக் காதல்

அருமையான புத்தகங்கள் நடுவே
ஆசையாய் மயிலிறகை வைத்து
இன்பமாக உன்னை ரசித்து
ஈரேறு ஆண்டுகள் மட்டுமே படித்து
உன்னை கைவிடாமல் மனமுடைந்து
ஊற்றுநீராய் பெருகும் அருவி போல்
எனக்குள் இருக்கும் தாக்கம்
ஏனோ, இந்த மயக்கம்
ஐய்யம் உண்டு எனக்கும்
ஒன்று மட்டும் நிச்சயம்
ஓராயிரம் கனவுகளை சுமந்து
ஔவை சொன்னத் தமிழையும்
அஃதே நித்தமும்
வாசிக்கின்றேன்.
இதுதான், காதல் என்பதா!



கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# முக்கோண வாழ்க்கை

என் ஒவ்வொரு
"பரவாயில்லை"க்குப் பின்னும்
ஒரு கனத்த மனம் இருக்கிறது.

என் ஒவ்வொரு
"வேற என்ன பண்றது"க்கு பின்னும்
ஒரு தவிப்பு தத்தளிக்கிறது.

என் ஒவ்வொரு
"விடு பாத்துக்கலாம்"க்கு பின்னும்
ஒரு நம்பிக்கை இழையோடுகிறது.

கனத்த மனம்
தவிப்பு
நம்பிக்கை



மூன்று வார்த்தைகள் கொண்டே
முக்கோணம் வரைகிறது
வாழ்க்கை.

பரவாயில்லை
வேற என்ன பண்றது
விடு பாத்துக்கலாம்

என்றபடி
முக்கோணத்தை முப்பட்டகமாக்கி
வெள்ளை வெளிச்சத்தை
வண்ணமயமாக்கி கடத்துகிறதென்
அறிவு

வண்ணமேறிப்போகிறது
அதே முக்கோண வாழ்க்கை.

கவிஞர் முத்து மீனாட்சி

# மழைச்சாரல்

மழைச்சாரல்
மெல்லிசையில்
மயங்கும் பூமி

கோடைக்கு இதமோ
அக்னிக்கு வரவேற்போ
அழகு கார்வண்ணனின்
கைவரிசை கலகலப்பில்

சாரலும்
சாளரம் நிறைந்த
குளிரின் தீண்டலும்

உறைந்த புன்னகை
மௌனத்தில்
உனக்குள் பேசும் ரகசியம்
உயிரைத் தீண்டும்



உன்மத்தம் கொண்டே
உதிரும் துளிகளை
உள்ளங்கையில் நிறைத்து
விரலிடுக்கில் விடைகொடுக்க

விழியகல மறுத்து
சாரலின் சங்கமத்தை
தரிசிக்கும் விழிகள்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி,நாகை மாவட்டம்

# ஆரோக்கிய வாழ்வு

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும் ".
முதலில் நம் உடல் ஆரோக்கியமாக இருக்க
ஒழுக்கம் மிக மிக முக்கியம்.
அளவு அறிந்து உண்பதும், ஆரோக்கியமான
உணவை உண்பதுமே நன்மை பெருகுமே !
கலப்படமில்லாதவையும், சிறுதானிய உணவும்
கீரை வகைகளும்,காய் கனிகளுமே!
நன்கு மென்று சுவைத்து உமிழ் நீரை
உணவுடன் கூழாக்கி சாப்பிட்டாலும் சுகமே.
"நம் இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார்
வாயில் தான் பல் உள்ளது . ஆனால்
வயிற்றில் பல் இல்லையே!" என்றார்.
வாரத்திலோ, மாதத்திலோ விரதம் ஒரு நாள் இருக்கலாமே!
அசைவ உணவை தவிர்த்தாலே
ஆயிலும் கூடுமே!
அறிவும் மேம்படுமே.
வள்ளுவ பெருந்தகையின் 'புலால் மறுத்தல்'
அகராதியில்
"தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிதுஊண் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்".
தன் உடம்பை பெருக்குவதற்கு சிறிதும்
இரக்கமின்றி உயிரைக் கொன்று தின்பது
வாழ்க்கையில் அருள் இருக்காது என்கிறார் .
வளமாக வாழ்வோமாக!



கவிஞர் கிருஷ்ணவேணி மாவட்டம். ஆ,ஊத்தங்கரை

# கடிதம்

அம்மாக்களின் கடிதங்கள்
தாய்ப்பாலால் எழுதப்படுபவைகள்
பிரசவித்தோம்
கடமை முடிந்ததாக கருதும்
அம்மாக்கள்
இப்பூமியில் இன்னும் பிறக்கவில்லை
அவர்களை பொருத்தவரை
மண்ணில் நாம்
கை, கால் நீட்டி நடப்பதும்
கர்பப்பையில் எட்டி உதைத்து
விளையாடுவதும் ஒன்றே
ஏஞ்சாமி நேரத்துக்கு சாப்புடுய்யா
உம் பொண்டாட்டி எப்படி இருக்கா
புள்ள குட்டிகள பாத்துகய்யா
வேல வேலன்னு அலையாத சாமி
உடம்ப பார்த்துக்கய்யா.
இது போல
என்னை பெத்த ஏழைத் தாய்களின்
ப்ரியங்களில்
அந்த வானம் தோற்கும்
மெத்தப் படித்த
தாய்களின் கடிதங்களில்
முத்தங்கள் கொட்டிக்கிடக்கும்
இதுவரை நான்
பிரித்துப்பார்க்க இயலாத
எழுதப்படிக்கத் தெரியாத
என் தாயின்
இதயத்திற்குள்
எத்தனை எத்தனை
கோடி கடிதங்களோ!



கவிஞர் ஆர்.மோகன்ராஜ்

# மழைச்சாரல்



நனைந்ததை கடப்பதா
நனைத்ததை கடப்பதா

நடந்து வந்த பாதையில்
விதைத்ததை கடப்பதா

கடந்து வந்த பின்னும்
கடக்காமலே மனதில்

கவனம் எங்கோ
கவனமின்றி கடக்கிறது

கருமேகம்பின்
கரைவதா

கருவிழி உருளலில்
இமை மறைவில்
கரைப்பதா

காட்டுத்தீ
களவாடும் காற்றில்
கரைப்பதா

கரைவதில் கரைந்து
கலையாமல் மூழ்குவதா

அவள்
நிழல் கலைக்காது
தரையிறங்கி
அவளைத் தழுவியது
மழைச் சாரல்!

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# துளிப்பா



**சிரிப்பு**

அத்தனை உணர்வுகளையும்
அழகாய் மறைக்கும்
ஆயுதம்

**ஏக்கம்**

என்றாவது ஓர் நாள்
வயிறு நிறைந்திடாதா?
குழந்தை செல்வத்தினால்.

**அவள்**

வீட்டிற்குள்
கூட்டுப் புழுவாய் அவள்.
வாசலில் பட்டாம்பூச்சியாய் சுற்றித்திரிகிறேன்
நான்.
அவளின் வருகைக்காய்

**வலி**

வாளினை விட கொடூரமாய்
குத்தி கிழித்து வலியை தருவது
வார்த்தைகளே.

கவிஞர் பி.ரோஜாராணி,தேனி

# பழமொன்ரியுக்கள்


எரிகிற வீடு,
சாம்பலிலும் பங்கு கேட்கிறார்கள்.
அப்பாக்களின் தேவதைகள்!

பொழப்பற்ற நாசுவன்,
பாவம் பொண்டாட்டி தலைகள்.
உலகின் no .1

திட்டிக் கெட்டாருமில்லை,
வாழ்த்தி வாழ்ந்தாருமில்லை.
முகநூல் பாடங்கள்!

அங்காடிக்காரி பாடுகிறார்,
வெங்காயம் கறிவேப்பில்லை.
பொதுத்துறை ஏலம்!

வேலியில் போகிறதை,
கிழியக் கிழிய வேட்டிக்குள்.
கார்ல் மார்க்ஸ்



கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி,திருச்சி(மா)

# நலம் தருவாய் நரசிம்மா!

அகந்தைக் கிழங்கை அழித்திடவே
நகத்துடனும் சிங்க முகத்துடனும்
நான்காம் அவதாரமென
நரசிம்மா நீ உதித்தாய்!

அகத் தாமரையில் அமரவைத்து
அனுதினம் துதித்தவனின்
துயரினைக் களைந்திட,
வானளந்த திருவுருவே
தூணினுள்நீ உதித்தனையோ!

தோன்றிய நாள்முதலாய்
தொடர்ந்து வரும் துயரம்
'மா'வினுள் வண்டினைப்போல்
மனதுள்ளே வளருதப்பா!
பாதமலர் பற்றிநின்றேன்
பரந்தாமா துயர் களைவாய்!

வேதநெறி அறியேன்!
ஓதும் விதியறியேன்!
சாத்திரம் அறியேன்!
சாற்றுமுறை நானறியேன்!

அரிநாமமொன்றேதான்
அறுதுயர் களையுமென
போற்றித் துதிக்க வந்தேன்
ஏற்று எமக்கருள்வாய்!

நாவால் நின்திருநாமம்
நம்பி நவில்பவர்க்கு
நல்வினைகள் சூழ்ந்தென்றும்
நலம்பலவும் பெருகாதோ?

உதிக்கின்ற கதிரொத்த
உன்பார்வை பட்டாலே
பனிவிலகல் போலெந்தன்
பாபங்கள் விலகாதோ?
சங்கொடு சக்கரமும்
என்றுமிடர் அகற்றாதோ?



ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் பூவரசங் குப்பம்

மன்னுபுகழ் மாயவனின்
மனங்குளிரச் செய்பவளே!
உலகளந்த திருவடியின்
உயர்மடியில் அமர்ந்தவளே!

செங்கமலக் கண்களினால்
சினம்தணியச் செய்பவளின்
அருட்பார்வை பட்டாலே
அகலாத துயருமுண்டோ?

அகிலத்தைக் காத்திட
ஆராய்ந்து அருள்பவனே!
படைப்புகள் அனைத்துள்ளும்
படைத்தநீ உறைகின்றாய்!
பிறவித்துயர் களைய-நின்
அருட்பார்வை அருளாயோ?

நரசிங்கா நின்நாமம்
நாவால் துதிப்பவர்தம்
எண்ணத்தில் உறைந்து
ஏற்றம் அருள்பவனே!

வாடி வருவோர்க்கு
ஈடில்லா பெருமகிழ்வை
என்றும் அருள்வாயே!

தேரேறும் நின்னருளால்
நீரேறி நெல்விளையும்
பூவரசங் குப்பமுறை
புண்ணியன் நின்நாமத்தை
எண்ணித் துதிப்போர்க்கு
என்றும் துயரிலையே!

கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# வாழ்க்கை


பல்வேறு பணி சூழல்கள்
குடும்ப நெருக்கடிகள்
தாறுமாறான எண்ண ஓட்டங்கள்
எதிர்காலப் பயங்கள்
தொடரும் தோல்விகள்
தவறவிட்ட வாய்ப்புகள்
தலைத் தூக்க முடியாத கனங்கள்
இன்னும் என்னை விட்டுச் செல்லாத
எஞ்சியிருக்கும் கொஞ்சம்
கனவுகளுடன்
பணி முடிந்து
இரவு நேரத்தில்
இருச்சக்கர வாகனத்தில்
பயணிக்கும் நான்
அந்த தார் சாலையின்
இட வல திசையில்
தன் பின்னங்கால்கள்
அசையா வண்ணம்
ஒரு தாவுதலுக்கு மூன்று அங்குலம்
என்ற வேகத்தில்
முன்னேறிக் கொண்டிருக்கும்
அந்த தவளையின்
வாழ்க்கைக்காய் வேகத்தைக்
குறைத்து,
இன்னொரு வாழ்நாள் நீட்டிப்பு
வரத்தை நான் கொடுக்கும் போது
நிகழ்கால கடவுளாகிறேன்



கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# வாழ நினைத்தால் வாழலாம்

வாழ்க்கை என்பதில்
இன்பமும் உண்டு!
துன்பமும் உண்டு!
எதிர்கொள் நீயும்
துணிவு கொண்டு!
வாழத்தானே மானிடா
ஆயிரம் வழிகளுண்டு!
வாழு நீயும் கனவுக்கண்டு!
வாழ்ந்து பார்!
வாழ்க்கையில் இனிமையுண்டு!
உனக்கென உதவத்தானே
ஆயிரம் கரங்களுண்டு!
நீயும் துடிப்பது
ஏனோ? துயரம் கண்டு!
வாழ நினைத்தால்
வாழலாம் இந்த
பூமியிலே என
திடம் கொண்டு!
வெற்றி முடிதனை
சூடடா உயரம் சென்று!



கவிஞர் க.அஸ்ணி

# நேபாளம்

ஆஸ்திரேலியா ஆப்ரிக்கா அண்டார்டிக் ஆர்க்டிக்கும்
அமெரிக்கா வடதென்னாய் ஆசியாவும் ஐரோப்பா
என்றமைந்த கண்டங்கள் புவியியலார் பகுத்துள்ளார்!
கடலெனவே ஆர்க்டிக்கும் அண்டார்டிக் இந்துமாக்கடல்
பசிபிக்கும் அட்லாண்டிக் என்பனவாய்க் குறிப்பாரே!
நாம்வாழும் மாண்பாரதக் கண்டமது ஆசியாவில்!
மொழிவழியே தமிழ்நாடே தாய்நாடு! பாரதத்தில்
பெரும்பான்மை வாழ்மக்கள் இந்துக்கள் என்றாலும்
இந்துநாடு என்றபெயர் இதற்கில்லை! பாருலகில்
இந்துமத நாடாகத் திகழ்வதுவோ நேபாளம்!
தலைநகரம் காட்மண்டு! பண்பாட்டுக் களங்களென
எட்டினையே யுனெஸ்கோவே உலகத்தின் பாரம்பர்
யங்களது பெற்றுளதாய்ச் சாற்றுகிறது! பண்டமைந்த
தலைநகரம் பக்தபூரா ய்ச் சொல்கின்றார்! பட்கான் பேர்
அதற்குண்டே! அரண்மனையும் பசுபதிநாத் பாட்சாலா
கற்கோவில் என்றமைவு நிலநடுக்கம் கொண்டதுவே!
தவளகிரி சங்கு ஊரில் கோவிலுண்டு! பாய்நதியோ
மனோகரா வே! செண்பகமரம் சூழ்ந்ததுவே! நேவார் இன
மக்களங்கு வாழ்கின்றார்! மூன்றான பெருநகர்தான்
பதான் அதுவே! நேபாளக் கட்டிடத்தின் பாணியங்கே!
பலகோவில் கண்டிடலாம் ! அனுமன்தோ காப்பேரில்
வணிகவளா கமங்குண்டே! பவுத்தமத கட்டிடத்தின்
கலைகளங்கே! லிச்சாவி மல்லரான ஷா வம்சம்
ஆண்டதுவே! பவுத்தநாத் பேர் மடலாயமும் லிச்சாலிதன்
மரபமைந்த சிவதேவன் நிறுவியதே! பசுபதி பேர்
ஆற்றங்கரை சிவாலயந்தான் பசுபதிநாத்! இந்துக்கள்
மட்டுந்தான் வழிபடலாம்! மற்றவர்கள் ஆற்றினது
மறுகரையில் நின்றேதான் வழிபடலாம்! நிபந்தனைகள்
உண்டங்கே! லும்பினியும் புனிதத்தலம் ஆங்குண்டு!
இந்துநாடு நேபாளம் சென்றுகண்டு மகிழ்வோமே!

கவிஞர் கணக்காயன்(இ சே இராமன்)

# பாரம்பரியம்

ஆதி தொட்டு
அணையாது தொடர்வது
பாதியிலே நாகரிகமாற்றத்தால்
பாழாய்ப் போவது

சொத்தாக இருந்தது
சோதனை வந்தது
கலையும் கலைநயமும்
காணாது மறைய



கோயிலும் சிலையும்
தெருக்கூத்து பறை
சிலம்பம் என்பனவும்
சிதைந்து போகுதே

ஆடையும் ஆபரணமும்
அரோக்கியமில்லா உணவும்
விடை கொடுத்து
வீணாக்கி விட்டனரே

ஏழ்மையில் கிழியாமல்
ஏற்ற நாகரிகத்தில் கிழிந்தஆடை
வீழ்த்தும் நோய்களும்
விரட்டுது மனிதரையே

விருதோம்பல் மாறி
உபசரிப்பு இன்றி
கூட்டுக் குடும்பமில்லா
தனிக்குடும்ப வழக்கம்

தாய்தந்தை பாரா
தரமும் கெட்டு
மரியாதை இல்லா
மாற்றங்கள் கொள்ளுது

மனிதம் மறைய
மானம் துறக்க
புனிதம் இல்லாத
புத்தி வான்கள்
சமூகத்தைக் கெடுத்து
சாக்கடை ஆக்கும்
பல சகதியில்
வந்த ஈக்கள்

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# திருநீலகண்ட யாழ்ப்பாணர் நாயனார்

பாணர்கள் மனைவியுடன் யாழ் இசைத்து பாடுவார்கள்
மனமுருகி இறைவனையும் மன்னர்களையும் பாடுவார்கள்
தானமாக மன்னன் கொடுக்கும் பரிசே வாழ்வாதாரம்
பாணர் பற்றி புறநானூறில் ( 115 )கபிலர் குறிப்பிடுகிறார்
இவர்கள் கோவிலுக்குள் நுழைய அனுமதி இல்லை

திருவெருக்கத்தம் புலியூர் எனும் திருத்தலத்தில் வாழ்ந்தார்
திருத்தமாக யாழ் இசைத்து ஆடல் பாடலில் வல்லவர்
விரும்பித் தரும் தானங்களை மனதார பெற்றுக்கொள்வார்
திருவாலவாய் மதுரைக் கோயிலை வணங்கச் சென்றார்

ஆலவாய்க்கு மனைவி மதங்க சூளாமணியுடன் வந்தார்
வாயிலின் வெளியே நின்று தம் மனைவியுடன் பாடினார்
காலம் அறிந்து பதினான்கு வகை பாலை யாழில் மீட்டினார்
கோலமிடும் சொக்கனின் திருவுள்ளம் இசையில் உருகியது

சொக்கநாதர் மதுரை அடியார்கள் கனவில் தோன்றினார்
"இக்கணமே பாணரை கோயிலினுள் அழைத்து வாருங்கள்"
அக்கணமே திருநீலகண்டரின் கனவிலும் தோன்றினார்
எக்காரணமும் கூறாமல் கோயிலினுள் பண்ணிசைக்கவும்

அடியார்கள் அழைக்க இருவரும் கோவிலுக்குள் வந்தனர்
இடிஇடித்து பெய்த மழையில் கோவில் தரை ஈரமானது
விடிந்தும் விடியாதபொழுதில் அவர்கள் தரையில் அமர
தடுத்தாண்ட இறைவன் அசரீராக அங்கு ஒலித்த குரல்.

திருநீலகண்டர் இசைக்கும் யாழ் ஈரத்தில் சுருதி குறையும்
அருமை யாழ் இசை பிசுறு தட்டி அபஸ்வரம் ஆகிடும்
இருக்கையில் அமர்ந்து பாட பொற்பலகை இடுங்கள்
இருவரும் பொற்பலகையில் அமர்ந்து பாடினார்கள்




பசியில் இரந்துண்டு வாழும் பாணருக்கு பொற்பலகை
இசைக்கு அடிமையான இறைவனின் திருவிளையாடல்
வைகை கரை திருத்தலங்கள் வாசல் நின்று வழிபட்டு
தியாகேசரை பண் இசைத்துப் பாட திருவாரூர் வந்தார்கள்

திருவாரூர் அடியார்கள் கனவில் சிவன் தோன்றினார்
வரும் பாணரை வடக்கு வாசல் வழி அழைத்து வருக
ஊரே விழாக்கோலம் காண பானரை வரவேற்றார்கள்
திருக்கோயில் உள்ளே ஈசனை யாழில் இசைத்தார்

திருஞான சம்பந்தரின் புகழ் கேட்டு சீர்காழி வந்தார்
திருநீலகண்டரை அகமகிழ்ந்து வரவேற்றார் சம்பந்தர்
இருவரும், யாழ்ப்பாணரும், மதங்க சூளாமணியாரும்
அருகில் தங்கி வாழ இல்லமும் வசதிகளும் கொடுத்தார்

ஞானப் பால் உண்டவர் பாதங்களில் பணிந்து வணங்கினர்
தேனான அவர் பதிகங்களை யாழில் இசைத்துப் பாடினர்
மன மகிழ்ந்து சம்பந்தரின் திருமணத்தில் கல்ந்துகொண்டனர்
வானத்தில் தோன்றிய அருட் ஜோதியில் பரமர் தாள் சேர்ந்தனர் .

கவிஞர் ந.திருக்காமு

# நான்

எப்போதும் அழகுடனே நடக்கின்றேன்
நானும் என்னுடனும்
தனியொரு மனம்
இலக்கு இல்லாமல்
நடந்துக் கொண்டு இருந்தது.
எட்டிப் பார்க்காமல்
முற்றத்தை தூற்றுக்கொண்டே
தலைக் குனிந்து நின்றது.
’அழகிய மேகம்’



அகர முதல

கவிஞர் இராஜேஷ் சங்கரப்பிள்ளை,கதிரீசன் அடிவாரம்

# ஞானக்கூத்தன்

(கட்டுரை)

(அக்டோபர் 7, 1938 - சூலை 27, 2016)



ஞானக்கூத்தன் தமிழ்க் கவிஞர். இயற்பெயர் அரங்கநாதன். பிறந்த ஊர் நாகை மாவட்டத்தில் மயிலாடுதுறை அருகே உள்ள திருஇந்தளூர் ஆகும்.

இவரது தாய்மொழி கன்னடம். "திருமந்திரம்" நூல் ஏற்படுத்திய தாக்கத்தால் தனது புனைப்பெயராக ஞானக்கூத்தன் என்ற பெயரை ஏற்றார்.

## இதழில் பங்கு

இராமகிருஷ்ணன், சா. கந்தசாமி, ந. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரோடு இணைந்து ஞானக்கூத்தன் துவங்கிய இதழ் 'கசடதபற'. 'கவனம்' என்ற சிற்றிதழைத் தொடங்கினார். 'ழ' இதழின் ஆசிரியர்களில் ஆத்மநாம், மற்றும் ராஜகோபாலனுடன் இவரும் ஒரு ஆசிரியராக இருந்தார். இவர் 'மையம்', 'விருட்சம்' (தற்போது நவீன விருட்சம்), மற்றும் 'கணையாழி' பத்திரிகைகளில் பங்களித்திருக்கிறார். க. நா. சுப்பிரமணியத்தின் 'இலக்கிய வட்டம்', சி. மணியின் 'நடை' போன்ற சிற்றிதழ்களில் இவரது கவிதைகள் வெளியாகியுள்ளது. இவரது கவிதைகள் பெரும்பாலும் சமூகத்தை சித்தரிப்பதாக உள்ளது.

## தொழில்

இவர் அரசு பணிக்காக தேவர்வெழுதி சென்னையில் அரசு பணியில் இணைந்து பணியாற்றினார். 1968இல் இருந்து கவிதைகள் எழுத ஆரம்பித்தார். இவர் 'பிரச்சினை' என்கிற கவிதையின் மூலம் அறிமுகமானார். 1998இல் இவரது கவிதைகள் "ஞானக்கூத்தன் கவிதைகள்" என்கிற பெயரில் வெளியிடப்பட்டது.

# ஞானக்கூத்தன்

(கட்டுரை)


## திரைப்பட பங்களிப்பு

மருதநாயகம் (திரைப்படம்) திரைக்கதையை, புவியரசு, சுஜாதா(எழுத்தாளர்) ஆகியோருடன் இணைந்து எழுதியுள்ளார்.

## இயற்றிய நூல்கள்

### கவிதை நூல்கள்:

அன்று வேறு கிழமை
சூரியனுக்குப் பின்பக்கம்
கடற்கரையில் சில மரங்கள்
மீண்டும் அவர்கள்
பென்சில் படங்கள்
ஞானக்கூத்தன் கவிதைகள்
என் உளம் நிற்றி நீ
இம்பர் உலகம்




### கட்டுரை நூல்கள்

கவிதைக்காக
கவிதைகளுடன் ஒரு சம்வாதம்
பிற நூல்கள்
ஞானக்கூத்தன் நேர்காணல்கள்

### பிற படைப்புகள்

கனவு பல காட்டல்
நம்மை அது தப்பாதோ?
சொன்னதை கேட்ட ஜன்னல் கதவு
அலைகள் இழுத்த பூமாலை

# ஞானக்கூத்தன்

(கட்டுரை)

## விருதுகள்

2010இல் கவிதைக்காக சாரல் விருதினைப் பெற்றார்.
விஷ்ணுபுரம் இலக்கிய வட்டம் வழங்கும், இலக்கிய பங்களிப்பிற்கான விஷ்ணுபுரம் விருதினை (2014)இல் பெற்றார்.

## மறைவு

கவிஞர் ஞானக்கூத்தன் 2016 சூலை 27 புதன்கிழமை தனது 77வது அகவையில் சென்னையில் காலமானார்.


நன்றி : விக்கிப்பீடியா

அகர முதல



# எல்லாம் நன்மைக்கே

## (சிறுகதை)



கணவர் இருந்தபோது காலை 5:00 மணிக்கு போய் கோயில் மணியை அடிக்கும்போது கிராம மக்கள் சீனு சாஸ்திரிகள் நடை திறந்தாயிற்று என்பார்கள்.

சுவாமி பெருமாளுக்கும் தாயார் களுக்கும் நைவேத்தியம் செய்யும் கைங்கரியம் ருக்மணிக்கு கிடைத்த பாக்கியமாக கருதுவாள். அவர் காலமாகி ஆறு மாதங்கள் ஆகிவிட்டன.

ஒரே மகன் சங்கரன் பக்கத்தில் இருக்கும் டவுனில் காலேஜ் படுத்திக் கொண்டிருந்தான்.

படிப்பு முடிந்தாகிவிட்டது இனி வேலைக்கு முயற்சி செய்ய வேண்டும். வேலை தேடி சென்னைக்கு வந்த இடத்தில் ஜான்சியை சந்திக்க நேர்ந்து, காதலாகி பின் திருமணம் என்று வர, கிராமத்தில் இருக்கும் அம்மாவிடம் திருமணம் பற்றி பேச, ஜான்சி கிறிஸ்துவ பெண் என்று தெரிய வர தடுத்துப் பார்த்த தாயை, உதவி தள்ளி விட்டு சென்னை வந்து ஜான்சியை திருமணம் செய்து கொண்டு சென்னையிலேயே தங்கி விட்டான்.

தாயின் நினைவுகள் அவ்வப்போது வந்தாலும் காதல் அவன் கண்ணை மறைத்தே விட்டது. கேசவனும், அவன் மனைவி லட்சுமியும் குழந்தைகளுடன் திருமலைக்குச் சென்று ஏழுமலையானை தரிசிக்க காரில் சென்றனர்.

மாலை 4 மணிக்கு தான் தரிசனம். அதுவரை பாபநாசம், ஆகாச கங்கை சென்று பார்க்கலாம் என்று புறப்பட்டு குளித்தபின் பூஜை முடித்துவிட்டு கிளம்பும் முன் லட்சுமியின் கண்களில் ஒரு துணிப்பை மூட்டையாக கட்டடப்பட்டு ஆகாச கங்கை படிக்கட்டில் கிடந்தது. கூட்டம் குறைந்து விட்டதால் சுற்றும் பார்த்தால் யாருமே அங்கு இல்லை. திறந்து பார்த்ததில் பணம் பத்து லட்சம் இருந்தது. நாம் முதலில் தரிசனத்திற்கு செல்வம். பின்பு காவல் நிலையத்தில் ஒப்படைத்து விடலாம் என்று முடிவு செய்தனர். பணத்தை காரில் வைத்து பூட்டிவிட்டு சாமி தரிசனத்திற்கு காத்திருந்தனர்.

# எல்லாம் நன்மைக்கே

## (சிறுகதை)

சங்கரன் அம்மா ருக்மணி, தன் மகன் தன்னை விட்டுச் சென்ற பின் ஆண்டவனையே நினைத்து" எனக்கு நல்ல வழி காட்ட மாட்டாயா? என் மகன் எங்கிருந்தாலும் அவன் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இருந்தால் போதும். " தினமும் வேண்டிய படியே இருந்தாள். தான் தங்கி இருந்த ஒரே வீட்டையும் விற்ற பணத்தை துணிப்பையில் மூட்டையாக கட்டிக்கொண்டு திருப்பதி சென்றால் திருப்பம் வரும் என்று கிளம்பினாள்.

தன் மகனுக்கு இந்த பணத்தை எப்படியாவது சேர்த்து விட வேண்டும், முடியாவிட்டால் திருப்பதி உண்டியலில் சேர்த்து விட வேண்டும். இனி பகவானின் விருப்பப்படியே நடக்கட்டும். ஒரு தீர்மான முடிவோடு வந்தவளுக்கு ஆகாச கங்கையில் துணிப்பையை மறந்து வைத்துவிட்டு போய்விட்டாள். திரும்பி வந்து பணத்தை தொலைத்து விட்ட இடத்தை பார்த்தவளுக்கு அங்கே இல்லை என்ற அதிர்ச்சியில் மயங்கி விழ, " அந்தப் பரந்தாமன் அவள் வந்த வேலையை பூர்த்தி செய்து அழைத்துக் கொண்டார் போலும்."

கேசவனும், லட்சுமியும் தரிசனம் முடிந்து காரில் ஏறின உடனே, போன் கால் வந்தது. வீடு தீப்பற்றி விட்டது என்று வேலையால் சொல்ல உடனே பயணப்பட்டார்கள்.

பணத்தைப் பற்றி மறந்தே போனார்கள். ஊர் சேர்ந்ததும் பார்த்தால் அவர்களின் மாளிகை வீடு நன்றாகவே இருந்தது.

ஊரில் இந்துக்களும், கிறிஸ்தவர்களும் சமமாகவும் ஒருவருக்கொருவர் சகோதரத்துடன் பழகி வந்தனர்.

கிறிஸ்தவர்களுக்கென்று கோயில் இல்லாததால் கேசவன் அவ்வூர் பஞ்சாயத்து தலைவர் ஆனவுடன் இயேசு கோயிலையும் கட்டி, அக்கோயிலை பராமரிக்க ஜோசப்பை அமர்த்தினார்.

ஜோசப்பிற்கு திடீரென மாரடைப்பாள் மரணம் ஏற்பட, ஊரில் இருந்த அவன் தங்கையையும், கணவரையும் வரவழைக்கப்பட்டார்கள்.

# எல்லாம் நன்மைக்கே

(சிறுகதை)

அந்த தம்பதிகள் இருந்த வீடு தான் தீ பற்றி எரிந்து விட்டது. உயிருக்கு எந்த ஆபத்தும் நேரவில்லை. " ஏங்க அவர்களுக்கென்று வீடு கட்டியாக வேண்டும். உடனடியாக நம் கையிலும் பணம் இல்லை. அரசாங்கத்திடம் தகவல் சொல்லியாகி விட்டது பணமும் தருவார்கள் ஆனால் பணம் வர தாமதமாகும். நாம் திருப்பதியில் கண்டெடுத்த பணத்தை இவர்களுக்கு உதவினால் என்ன?" தற்சமயம் நம் கையிலும் பணம் இல்லை" என்றால் லட்சுமி.

கேசவனுக்கும் இது சரியெனப் பட்டது. திருப்பதியில் கண்டெடுத்த அந்த துணிப்பை மூட்டையை அவர்களை அழைத்து கொடுக்க, அதை வாங்கும்போது சங்கரனுக்கு ஒரு சிலிர்ப்பு. இருக்காதா என்ன? அந்த தாயின் உயிர் மூச்சல்லவா அந்த பணம் எல்லாம் இறைவனின் திருவிளையாடல்.



கவிஞர் கிருஷ்ணவேணி. ஆ,ஊத்தங்கரை


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
நீ வெற்றி பெற்றால்
சாதனையாளன் பெறாவிட்டால்
பிறருக்கு போட்டியாளனே தவிர
தோல்வியாளன் இல்லை..!
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகரமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com